<u>22.07.2025</u>

<u>O.S.No.08/2012</u>

<u>வா.சா.1.திரு.அப்துல்லா த.பெ. மதார்ராவுத்தர்</u>

<u>சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்</u>

**<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

( சாட்சி வயதை கருத்தில்கொண்டு அமர்ந்து சாட்சியம் அளிக்க வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் செய்ததன் அடிப்படையில் சாட்சி நாற்காலியில் அமர்ந்து சாட்சியம் அளிக்க அனுமதிக்கப்படுகிறார்)

16.10.2002 தேதியில் மதுரை வடக்கு வட்டாட்சியர் செல்லபொண்ணு என்பவருக்கு கொடுத்த நத்தம் மனை பட்டா ( பட்டா எண்.243) அசல் **வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.10.2002 தேதியில் மதுரை வடக்கு வட்டாட்சியர் ஜாபர் என்பவருக்கு கொடுத்த நத்தம் மனை பட்டா ( பட்டா எண்.245) அசல் **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.10.2002 தேதியில் மதுரை வடக்கு வட்டாட்சியர் அப்துல்ரஹிம் என்பவருக்கு கொடுத்த நத்தம் மனை பட்டா ( பட்டா எண்.246) அசல் **வா.சா.ஆ. 3**ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.10.2002 தேதியில் மதுரை வடக்கு வட்டாட்சியர் காதர்மைதீன் என்பவருக்கு கொடுத்த நத்தம் மனை பட்டா ( பட்டா எண்.247) அசல் **வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.10.2002 தேதியில் மதுரை வடக்கு வட்டாட்சியர் அப்துல்லா என்பவருக்கு கொடுத்த நத்தம் மனை பட்டா ( பட்டா எண்.248) அசல் **வா.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 17.12.2002 தேதியில் இரணியம் கிராம பஞ்சாயத்தில் இருந்து பெறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கட்டிட வரைபடம் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராது மாதிரி வரைபடம் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( 2 ம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) 06.12.2004 தேதியிட்ட செல்லபொண்ணு என்பவர் 1 முதல் 3 வாதிகளுக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல் **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

03.12.2004 தேதியிட்ட மைதீன்மதார் என்பவர் 4 முதல் 6 வாதிகளுக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சார்பதிவக நகல் **வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 22.02.2005 தேதியிட்ட காதர்மைதீன் என்பவர் 7, 8 வாதிகளுக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல் **வா.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 11, 12 வாதிகள் பெயரில் கொடுக்கப்பட்ட நத்தம் நிலவரிதிட்ட துூய சிட்டா **வா.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்துக்கு வாதிகள் பெயரில் செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீதுகள் 18 எண்ணிக்கைகள் அசல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.01.2005 தேதியிட்ட வாதி, பிரதிவாதிகளுக்குள் ஏற்பட்ட குடும்ப ஏற்பாட்டு ஆவணம் அசல் **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( 2 ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணம் மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று ஆட்சேபணை செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது ) 28.08.2015 தேதியிட்ட 10 ம் வாதி அப்துல்ரஹிம் 12 ம் வாதி முகமதுஅனிபாவிற்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் மெமோரண்ட பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( 2 ம் பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணம் இந்த வழக்கிற்கு பிந்தைய ஆவணம் என்று ஆட்சேபணை செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது )

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.P.மகாராஜன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.